05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# தமிழருவி மரபுகவிதைத் தொகுப்பு நூலில் வெளிப்படும் பண்பாட்டுச் சிந்தனைகள்
# "PENAMPILAN NILAI BUDAYA DALAM KUMPULAN PUISI TRADISIONAL TAMIL ARUVI"

சந்திரன் கோவிந்தன்
CHANDRAN A/L GOVINDAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (BAHASA TAMIL)
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
2018

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது தமிழருவி மரபுகவிதைத் தொகுப்பு நூலில் வெளிப்படும் பண்பாட்டுச் சிந்தனைகளை அடையாளம் காணுதல், தமிழருவி மரபுகவிதையில் வெளிப்படும் சமுதாய எதிர்ப்புகளைப் பகுத்தாய்தல், தமிழருவி மரபுகவிதை சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்வை விளக்குதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. தமிழருவி மரபுகவிதை தொகுப்பு நூலில் 1940-1991 இயற்றப்பட்ட 98 கவிதைகள் இவ்வாய்வுக்குப் பயன்பட்டுள்ளன. தமிழருவி மரபுகவிதை தொகுப்பு நூலில் உள்ள கவிதைகள் பண்புசார் ஆய்வு, நூலக ஆய்வு அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இலக்கியப் பண்பாட்டுக் கோட்பாட்டின் அடிப்படையில் தமிழருவி மரபுகவிதைத் தொகுப்பு நூலில் உள்ள கவிதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட கவிதைகள் தனிமனிதன், குடும்பம், சமூகம் ஆகிய உட்பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தமிழருவி மரபுகவிதைத் தொகுப்பு நூலில் உள்ள 98 கவிதைகளில் 32 கவிதைகள் தனிமனிதனுக்குத் தேவையான பண்பாடுகளை வலியுறுத்துகின்றன. 36 கவிதைகள் குடும்பத்திற்குத் தேவையான பண்பாடுகளை வலியுறுத்துகின்றன. மேலும், தமிழருவி மரபுகவிதைத் தொகுப்பு நூலில் உள்ள கவிதைகளில் 30 கவிதைகள் சமூகத்திற்குத் தேவையான பண்பாடுகளைக் கொண்டுள்ளன. மாந்த வாழ்வுக்கு அரணாக அமைய வேண்டிய நற்பண்புகளான பண்பாட்டுச் சிந்தனைகள், பெரியோரை மதித்தல், நல்லொழுக்கம், நேர்மை, ஆகியவற்றை உள்ளார்ந்து உணர்ந்து வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இப்பண்பாட்டுச் சிந்தனைகள் குழந்தைகள், இளைஞர்கள், குடும்ப உறுப்பினர்கள், சமூகத்தினர் ஆகியோரின் சிந்தனைகளை வடிவமைக்க செய்கின்றன. மேலும் இப்பண்பாட்டுக் கூறுகள் வாழ்க்கையினைச் செம்மைபடுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**PENAMPILAN NILAI BUDAYA DALAM KUMPULAN PUISI TRADISIONAL *TAMIL ARUVI***

## ABSTRAK

Tujuan kajian ini adalah untuk mengenal pasti pemikiran nilai budaya, menganalisis protes sosial dan menghuraikan kesedaran yang diwujudkan dalam kumpulan puisi tradisional *Tamil Aruvi* oleh Kurinji Kumaran. Sejumlah 98 puisi tradisional yang dikarang dari tahun 1940 - 1991 dipilih sebagai sampel dalam kajian ini. Pendekatan kualitatif dengan menggunakan kaedah kajian kepustakaan dan analisis teks digunakan dalam kajian ini. Teori sastera budaya yang dipelopori oleh Alan Sinfield digunakan bagi menganalisis kumpulan puisi tradisional *Tamil Aruvi*. Pola perbincangan kajian ini bertumpu kepada penampilan nilai budaya dari aspek individu, keluarga dan masyarakat. Dapatan kajian menunjukkan, 32 puisi tradisional menggambarkan nilai budaya dari aspek individu, sebanyak 36 puisi tradisional menggambarkan nilai budaya dari aspek keluarga dan sebanyak 30 puisi tradisional menggambarkan nilai budaya dari aspek masyarakat. Puisi tradisional ini menampilkan nilai-nilai budaya individu, keluarga dan masyarakat yang harus dijadikan panduan kepada manusia sejagat supaya baik hati, hormat menghormati, hemah tinggi, jujur serta menghayati nilai-nilai budaya. Nilai-nilai budaya yang dianalisis dapat dijadikan sebagai teladan dan panduan hidup kepada kanak-kanak, golongan remaja, ahli keluarga, serta masyarakat. Implikasi kajian ini juga dapat mencorak pemikiran remaja dari aspek nilai dan budaya serta dapat menerapkan nilai budaya tersebut dalam kehidupan seharian.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**THE MANIFESTATION OF CULTURAL VALUES IN THE COMPILATION OF TRADITIONAL POEMS OF *TAMIL ARUVI***

## ABSTRACT

The research aims to identify the cultural values, analyze the social protests and explain the awareness created in the compilation of traditional poems of *Tamil Aruvi* by Kurinji Kumaran. A total of 98 traditional poems written from 1940-1991 have been chosen as sample for this research. A qualitative method based on library and text analysis is carried out in this research. Cultural literary theory proposed by Alan Sinfield is used to analyze the traditional poems of *Tamil Aruvi*. The discussion format of this research focuses on the manifestation of cultural values from the aspects of the individual, the family and society. The findings of this research show that 32 traditional poems identify cultural values that emphasize individual aspects, 36 traditional poems that analyze the social protests in the family and 30 traditional poems that explain the awareness of cultural values in the society. These traditional poems manifest the cultural values of the individual, the family and society which could be a guide to humanity to be kind, respectful, highly regarded, honest and appreciative of cultural values. The analyzed cultural values can serve as an example and guidance to children, teenagers, family members and the community in general. The implication of these research findings would help to change the mindset of youths regarding cultural values and consequently be absorbed into their daily routine.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | | **பக்கம்** |
| **ஆய்வாளர் உறுதிமொழி** | | ii |
| **ஆய்வு உறுதிப் படிவம்** | | iii |
| **நன்றியுரை** | | iv |
| **ஆய்வுச் சுருக்கம்** | | v |
| **ABSTRAK** | | vi |
| **ABSTRACT** | | vii |
| **பொருளடக்கம்** | | viii |
| **அட்டவணைப் பட்டியல்** | | xii |
| **வரைபடப் பட்டியல்** | | xiii |
| **குறிவரைவுப் பட்டியல்** | | xiv |
| **இயல் 1** | **அறிமுகம்** | |
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வுப் பின்னணி | 5 |
| 1.3 | குறிஞ்சிக்குமரனார் வாழ்க்கை வரலாறு | 14 |
| 1.4 | ஆய்வுச் சிக்கல் | 34 |
| 1.5 | ஆய்வு நோக்கம் | 37 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.6 ஆய்வு வினா 37

1.7 ஆய்வு முக்கியத்துவம் 38

1.8 ஆய்வு எல்லை 41

1.9 ஆய்வுச் சான்றாதாரம் 42

1.10 கலைச்சொல் விளக்கம் 42

1.10.1 மரபுகவிதை 43

1.10.2 பண்பாட்டுச் சிந்தனை 44

1.11 தொகுப்புரை 45

**இயல் 2** **முந்தைய ஆய்வு**

2.1 முன்னுரை 46

2.2 முந்தைய ஆய்வு 47

2.2.1 உள்நாட்டு ஆய்வு 48

2.2.2 வெளிநாட்டு ஆய்வு 55

2.3 தொகுப்புரை 60

**இயல் 3** **ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 61

3.2 ஆய்வு வடிவமைப்பு 62

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 63

3.4 ஆய்வு அணுகுமுறை 64

3.4.1 நூலக ஆய்வு 65

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.4.2 விளக்கமுறை ஆய்வு 66

3.5 தரவு சேகரிப்பு முறை 67

3.6 தரவு பகுப்பாய்வு 68

3.7 பண்பாட்டுக் கோட்பாடு 69

3.8 ஆய்வுக் கோட்பாடு 69

3.9 கோட்பாடு வடிவமைப்பு 78

3.10 தொகுப்புரை 79

**இயல் 4 ஆய்வுக் கண்டுபிடிப்புகள்**

4.1 முன்னுரை 80

4.2 பண்பாட்டுச் சிந்தனைகள் 81

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.2.1 தனிமனிதன் 90

4.2.1.1 மொழிப்பற்று 91

4.2.1.2 நற்பண்பைப் பேணுதல் 114

4.2.1.3 ஒழுக்கம் 124

4.2.1.4 வீரம் 132

4.2.1.5 உழைப்பைப் போற்றல் 144

4.2.2 குடும்பம் 153

4.2.2.1 பெற்றோரைப் பேணுதல் 155

4.2.2.2 இல்லற வாழ்க்கை 166

4.2.2.3 அற வாழ்க்கை 176


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.3 சமுதாயம் 183

4.2.3.1 மதுவொழித்தல் 184

4.2.3.2 சாதியொழிப்பு 193

4.2.3.3 கலையைப் போற்றல் 207

4.2.3.4 பொங்கல் திருநாள் 217

4.2.3.5 சமயம் 230

4.2.3.6 தலைமைப்பண்பு 241

4.3 தொகுப்புரை 255

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 257

5.2 ஆய்வு முடிவுகள் 258

5.3 தொடர் ஆய்வுக்கான பரிந்துரை 267

5.4 தொகுப்புரை 269

**துணை நூற்பட்டியல்** 270

**பின்னிணைப்பு** 270

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்

**வரைபடம்** **பக்கம்**


4.1 தமிழ் மொழியைப் பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர் 100

4.2 மலேசிய நாட்டின் பள்ளிகளின் விபரம் 109

4.3 இந்தியர்களின் குற்றச்செயல் வகை 119

4.4 உழைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய அளவு 147

4.5 1938–1947 மலாயாவில் தோட்ட வேலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 151

4.6 கைவிடப்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை 159

4.7 தமிழர் திருநாள் கொண்டாடிய இயக்கங்கள் 228

4.8 தடுப்பு முகாமிலுள்ள இனவாரியான எண்ணிக்கை 251

4.9 பள்ளிகளில் நடைபெறும் குற்றச்செயல்கள் 251


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## குறிவரைவுப் பட்டியல்

**வரைபடம்** **பக்கம்**

4.1 இளையோர் தொடர்பான குற்றங்கள் 2007 முதல் 2009 வரையிலான குற்றச் செயல்கள் 121

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## வரைபடப் பட்டியல்


| வரைபடம் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வுக் கட்டமைப்பு | 63 |
| 3.5 | கோட்பாடு வடிவமைப்பு | 78 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.0 முன்னுரை

மொழி மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். ஒரு மொழி செம்மாந்த இடத்தைப் பெறுவதும் செழிப்புற்று விளங்குவதும் அம்மொழியைப் பேசும் மக்களை ஒட்டியே அமைந்துள்ளது. அவ்வகையில் உலகில் பல எண்ணிறந்த மொழிகள் தோன்றியதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இன்று காலப்போக்கில் பல மொழிகள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. சிலவே, இன்றளவும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றுள்ளன. அம்மொழிகளுள் தமிழ், சீனம் போன்ற ஒரு சில மொழிகளே பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வருகின்றன. மொழியும் மொழி வழியான இலக்கியமும் மாந்தனின் செம்மாந்த வாழ்வு நெறிகளுக்கு வழிகாட்டியாக அமைந்து வருகின்றது.

தமிழ் இலக்கியம் தொன்மைச் சிறப்புடையது. இலக்கியம் மாந்த வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. மாந்தனின் சிந்தனையைச் செதுக்குவதோடு பண்புநலனையும் வடிவமைக்கின்றது எனலாம். ஆகவே, சமுதாய வடிவமைப்பில் இலக்கியங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. ManaSikana, (2009) கூற்றுப்படி இலக்கியம் சமுதாயச் சிக்கல்களைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகும் என்கின்றார். மேலும், இலக்கியங்கள் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுபவை என்கின்றார். வையாபுரிப்பிள்ளை (1990), அவர்களின் கூற்றுபடி இலக்கியங்கள் அவ்வந்த காலத்தோடு பின்னிப் பிணைந்தவை என்கின்றார். மேலும், இலக்கியங்கள் நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிப்பதாகக் கூறுகின்றார். இலக்கியம் கற்பதன் வழி நாம் நமது சிந்தனையையை மேலும் வலுப்படுத்த முடியும். இதன் வழி சிந்தனை வளமிக்க சமுதாயமாக நாம் உருவாக முடியும் என்பது திண்ணம். இலக்கிய வடிவங்களைப் பல வகையாகக் கொள்ளலாம். நாவல், உரைவீச்சு, நாடகம், ஆகியவை இலக்கிய வடிவங்களாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில் தமிழருவி மரபுகவிதை தொகுப்பில் காணப்படும் பண்பாடுகள் ஒட்டி இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவ்வாய்வில் மலேசிய இலக்கியப் படைப்பான தமிழருவி நூலில் உள்ள கவிதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இக்கவிதைகள் மலேசிய இலக்கிய உலகில் சிறப்பிடம் பெற்ற சா.சி.குறிஞ்சிக்குமரனாரின் படைப்புகளாகும். இக்கவிதைகளிலுள்ள பண்பாட்டுச் சிந்தனைகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதனை ஆய்வு செய்ய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி இவரது கவிதைகளில் பண்பாட்டுச் சிந்தனைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஆழமாக அறியலாம். பண்பாட்டுச் சிந்தனைகள் எவ்வாறு மானுட வாழ்க்கையினை வடிவமைக்கின்றன என்பதனையும் அறிய முடியும். இக்கவிதைகளை ஆய்வு செய்வதன் வழி பண்பாட்டுச் சிந்தனைகள் எவ்வாறு மாந்தப் பண்புகளையும் நற்குடிமக்களையும் உருவாக்க முடிகிறது என்பதை அறிய முடிகின்றது.

05-4506832 Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah

குறிஞ்சிக்குமரன் என்கிற சா.சி.சுப்பையா மலேசியக் கவிதை இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராவர். இவரது கவிதைகள் மலேசியக் கவிதை உலகில் குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் தாக்கத்தினையும் ஏற்படுத்தியவையாகும். இவரது படைப்புகளில் காணப்படும் சொல்லாட்சிகளும் கருத்துகளும் தமிழின மீட்புக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்கினை வகித்தன எனலாம். தமிழ் நெறிச் சிந்தனைகளை மக்களிடையே விதைத்ததில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. மலேசிய மரபுகவிஞர்கள் மத்தியில் வரலாறாய் வாழ்ந்தவர் சா.சி.குறிஞ்சிக்குமரனார். இளையோர்கள் தமிழ்ப்பண்பாடு, தமிழ்மொழி, இனம், ஒற்றுமை ஆகிய சிந்தனைகளோடு உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இறுதி வரை உறுதியாய் வாழ்ந்தவர். தமிழ் நெறிச் சிந்தனையை தமது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த சா.சி.குறிஞ்சிக்குமரனாரைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். இளங்குமரனார், (2003) தமது தமிழ்நெறி என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். தமிழ்நெறிச் சிந்தனை என்பது இயற்கையோடு ஒன்றித்த வாழ்வாகும். தமிழ்நெறி வாழ்வு மக்களின் சிந்தனை மாற்றத்திற்கு வித்திடும்; அஃது இயற்கை வாழ்வாகும் என்கின்றார். குறிஞ்சிக்குமரனாரின் படைப்புகளில் இவ்வாறான சிந்தனை ஓட்டங்களை நாம் காண முடியும்.

இவரின் படைப்புகளில் பெரும்பாலானவை மொழித்தூய்மை, பண்பாடு, இனப்பற்று, சமுதாயப்பற்று ஆகிய கருப்பொருள்களைக் கொண்டு படைக்கப்பட்டிருக்கும். இவரது மொழிநடையும் மிக உயரிய நடையாகும். கவிஞர் சா.சி.குறிஞ்சிக்குமரனார் இளையோர்கள் சிறந்த அறிவாற்றலுடன், மொழிப்பற்றோடு விளங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். மொழிப்பற்று, இனப்பற்று வாயிலாக மக்களை மேம்பட்ட இனமாக உருவாக்க முடியும் என விரும்பியவர். இவரின் படைப்புகள் இதற்குத் தக்கச் சான்று பகரும். இவரின் மொழித்தூய்மை, இனப்பற்றின் காரணமாகவே இவரது படைப்புகள் அனைவராலும் போற்றப்படுகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

தமிழ் இலக்கியம் மாபெரும் சிந்தனை ஊற்றாகும். இலக்கிய வளமும் இலக்கண நலமும் உடையது. ஏறக்குறைய முப்பது நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருவது. இம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் உலக இலக்கியங்களுக்கும் நாகரீகத்திற்கும் பண்பாட்டிற்கும் மூலமாக இருந்துள்ளன என்பது ஆணித்தரமான உண்மையாகும். தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கும் பழம்பாடல்களில் இவற்றை நாம் பெரிதும் காணலாம். தமிழ் இலக்கியங்கள் பற்றி குறிப்பிட வந்த பெஸ்கி பாதிரியார், தமிழ்ப்புலவர்கள் ஆற்றல் சான்ற மொழியினைக் கையாண்டுள்ளனர் என்கின்றார் (மீனாட்சி சுந்தரனார், *1999).* மேலும், தமிழ்க்கவிதையில் சிறந்த பாட்டுகள் இறையுணர்வு, இயற்கையருள் ஆகியவை காணப்படுகின்றன என்கின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்மொழி பழமையிலும் சொல்வளத்திலும் இலக்கண வரம்புடைமையிலும் செய்யுள் வகையிலும் பண்பாட்டுச் சிறப்பிலும் தலைச் சிறந்தது எனலாம். வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளிலும் தமிழ்ச்சொற்கள் அதிகம் கலந்துள்ளதைக் கண்கூடாகக் காணலாம். எனவே, தமிழின் பழமையும் சிறப்பும் நன்கு புலனாகின்றது. அவ்வகையில் இலக்கிய உலகில் மிகப் பழைய இலக்கியமாகச் சொல்லப்படுவது மரபுகவிதைகளே. சங்க காலத்தில் இயற்றப்பட்ட செய்யுள்கள் தமிழ்மொழி உலகத் தொன்மொழி என்பதை உலகுக்குப் பறைசாற்றுகின்றன. சங்க காலப் புலவர்களின் பாடல்கள் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன. மரபுகவிதைகள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சங்க காலம் முதற்கொண்டு இடைச் சங்கம், கடைச்சங்க காலம் வரையில் சிறப்புற்று விளங்கின எனலாம். இச்சங்க காலங்களில் படைக்கப்பட்ட அனைத்து இலக்கியப் படைப்புகளிலும் தமிழின் தூய்மையும் இலக்கியச் செழுமையும் போற்றப்பட்டு வந்தன என்றால் மிகையாகா (மீனாட்சி சுந்தரனார், 1999).

முதற்சங்க காலமானது ஏறக்குறைய 4500 ஆண்டுகள் முதல் 6000 ஆன்டுகள் வரை இயங்கியதாக ஆய்வுகள் குறிக்கின்றன. இக்காலக்கட்டத்தில் தோன்றிய இலக்கியங்களே தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகிய நூல்களாகும். இவை மரபுகவிதை வடிவில் இயற்றப்பட்ட செய்யுள்களாகும். இச்செய்யுள்களைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டப்பட வேண்டும். பாலசுப்பிரமணியம், தனது தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலிலே இவ்வாறு குறிப்பிடுகின்றார். சங்க காலப் பாடல்கள் சமூகவியல், பண்பாடு, நாகரீகம் ஆகிய உயரிய கொள்கைகளைக் கொண்டுள்ளன என்கின்றார். மேலும், மக்களின் சிந்தனையைச் செதுக்குவதோடு மேம்பட்ட நற்குடிமக்களாகவும் உருவாக வழியமைக்கும் என்கின்றார் சி.பாலசுப்பிரமணியம் (1991).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah

மலேசியத் தமிழ்க்கவிதை முன்னோடிகளுள் ஒருவரான முரசு நெடுமாறன் (1997), தமது மலேசியத் தமிழ்க்கவிதை களஞ்சியம் என்ற நூலிலே மலேசிய மரபுகவிதை இலக்கியம் 1946ஆம் ஆண்டுகளுக்குப் பின்புதான் வளர்ச்சிப் பெற்றதாகக் கூறுகின்றார். இக்காலக்கட்டத்தில் தான்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மலேசிய மணம் கமழும் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. இக்காலக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் நாட்டுச் சூழலையும், உழைப்பாளர் சிக்கலையும் முகாமை கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. மலேசிய இலக்கிய வளர்ச்சிக்குச் சிங்கை இலக்கியங்களே முன்னோடியாக இருந்துள்ளன என்கின்றார். 18ஆம் நூற்றாண்டில் தோட்டங்களில் பணிபுரிய மலாயாவுக்கு வரவழைக்கப்பட்ட தமிழர்களே மலேசியக் கவிதை இலக்கியம் வளருவதற்கு முகாமைக் காரணியாக அமைந்துள்ளனர் (முரசுநெடுமாறன் 1997). மலேசியத்தமிழ்க்கவிதையின் காலங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1887 முதல் 1941 – உரிமையுணர்ச்சி இல்லாக் காலம்

1942 முதல் 1945 – போர்முகில் சூழ்ந்த காலம்

1946 முதல் 1949 – எழுச்சி பிறந்த காலம்

1950 முதல் 1959 – ஏற்றமிகு காலம்

1960 முதல் 1969 – ஏற்றம் தொடர்ந்த காலம்

1970 முதல் 1979 – சோர்வு காலம்

1980 முதல் இன்றுவரை – சோர்வு தொடர் காலம் என வகைப்படுத்தியுள்ளார். இக்காலக் கட்டங்களில் மலேசியத் தமிழ் இலக்கியம் மூன்று முனைகளில் தோன்றியதாகக் முரசு நெடுமாறன் (1997), கூறுகின்றார். அவை வாய்மொழியாகத் தோட்டப்புறங்களில் பாடியப் பாடல்கள், கிழமை, மாத, நாள் இதழ்களில் வெளிவந்தவை, நூல்கள் வழி பிறந்த இலக்கியங்களே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆகும். இந்நாட்டில் தொடங்கப்பட்ட ஏடுகளும் மலேசிய இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகித்தன. சிங்கை வர்த்தமாணி, தங்கை நேசன், சிங்கை நேசன் (1887) ஆகியவை மலேசிய இலக்கியங்கள் வளருவதற்குப் பெரும் பங்கு வகித்தன.

1946 முதல் 1956 வரை இந்நாட்டில் வெளிவந்த கவிதைகள் சப்பானியர் காலச் சிக்கலைப் படம் பிடித்துக் காட்டின. படிப்படியாய் மக்களிடையே ஏற்பட்ட புதிய எழுச்சி, விடுதலை உணர்ச்சி, தொழிற்சங்கங்கள், அரசியல் இயக்கங்கள் தொடர்பான சிக்கல்களை வெளிப்படுத்தின. 1950க்குப் பிறகு இம்மண்ணில் பிறந்து வளர்ந்து இங்கேயே வளர்ந்து கல்வி கற்றவர்கள் எழுத்துத் துறையில் காலடி வைத்து இத்துறையை வளர்த்தனர். 1950 ஆம் ஆண்டு தொடங்கி 1951 ஆம் ஆண்டு வரை கதை வகுப்பின் வழி எழுத்துத் துறை புதிய பரிணாமத்தை அடைந்தது. தமிழ் முரசு இலக்கியப் போட்டிகள், எழுத்தாளர் பேரவை, தமிழ்ப்பண்ணை ஆகிய அமைப்புகள் இலக்கிய வளர்ச்சிக்குப் பாடாற்றின எனலாம் (முரசு நெடுமாறன், 1997).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழவேள் கோ.சாரங்கபாணியாரின் தலைமையில் தொடங்கப்பட்ட தமிழர் திருநாள் நிகழ்ச்சிகள் மலேசிய இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிந்தன. இவரின் இயக்கம் சாதி, சமய வேறுபாடுகளை மறந்து தமிழால் ஒன்றுபட வழியமைத்தது. இதனால் இலக்கிய வேட்கை மிகுந்தது. எழுத்துத்துறை விறுவிறுப்படைந்தது. 1957க்குப் பிறகு உருவாக்கப்பட்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இலக்கியங்கள் விடுதலை வேட்கையை மேலும் வலுப்படுத்தின. இக்காலக்கட்டத்தில் தோன்றிய இலக்கியங்களும் கவிதைகளும் ஒரு புதிய போக்கினை நோக்கி நடைபோட்டன முழுக்க முழுக்க மலேசிய உணர்வினைக் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இவ்வேளையில் 120 இதழ்களுக்கு மேல் தோன்றின. இவ்வேளையில் கவிவாணர் ஐ.உலகநாதனைக் கொண்டு வெளிவந்த மாதவி (1959) என்னும் திங்களிதழ் ஆற்றிய பணிகள் மலேசியத் தமிழ்க் கவிதை உலகில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும். இக்காலக்கட்டத்தில் இருபதுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் வெளிவந்தன அவற்றுள் சில குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தவிர்த்து முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியக் கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியக்கவிதை இலக்கியத்துறைக்கு மேலும் மெருகூட்டியது மலேசிய எழுத்தாளர் சங்கம். மலேசியப் படைப்பாளர்களின் படைப்புகளுக்கு ஊதியம் தர வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. இதனால் எழுத்தாளர்கள் பலர் உருவாகினர். இக்காலக்கட்டத்தில் பல இதழ்கள் தோன்றின. அவற்றுள் கூட்டுறவு, முத்தமிழ், உதயம், தமிழ்க்குயில், ஆகியவைக் குறிப்பிடத்தக்கன. இக்காலக்கட்டத்தில் தோன்றிய கலாச்சாரம் இதழ், கலை இலக்கிய ஏடாகவும், தந்தை பெரியாரின் சிந்தனைகளைக் கொண்ட சீர்த்திருத்த ஏடாகவும் உருவாகியது. மேலும், இக்கால கட்டத்தில் 25க்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் வெளிவந்தன (முரசு நெடுமாறன், 1997). கூட்டுறவு கவிதைகள் (1971), கவிதை பித்தன் கவிதைகள் (1968), கவிமஞ்சரம் (1976), இசைக்கொத்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


(1972), மலேசியக் கழகப் பாடல்கள், இலக்கிய நாயகி சீதை (1973), அலையோசை (1975), முதலிய நூல்கள் குறிக்கத்தக்கன. மலேசியக் கவிதை துறை மேலும் பல வெற்றிகளைப் பெற தேசிய நில நிதி கூட்டுறவு கழகமும் வழிகோலியது. துன் சம்பந்தனாரின் முயற்சியில் மாநிலந்தோறும் ஓராண்டிற்கு மேல் கவியரங்குகள் நடந்தேறின. பங்கு பெற்று வெற்றி பெற்ற கவிஞர்களுக்கு மதிப்புமிக்க பரிசுகள் வழங்கப்பட்டன.

இவர்களோடு தமிழ் நேசன் நாளிதழும் கவிதை இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகித்தது. தமிழ் நேசன் கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பவுன் பரிசினை வழங்கிச் சிறப்புச் செய்தது. ஒரு மாதம் முழுவதும் இடம்பெறும் சிறுகதைகள், கவிதைகளை ஆராய்ந்து ஒரு சிறுகதைக்கும் கவிதைக்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தால் சோர்ந்திருந்த பலர் புத்தூக்கம் பெற்றனர். இக்காலக்கட்டத்தில் உருவாக்கப்பட்ட கவிதைகள் சமுதாயம், நாட்டுப்பற்று, இயற்கையைப் போற்றுதல், பல்லின ஒற்றுமை, சீர்த்திருத்தம், இறை முதலாய பொருள்களில் பாக்கள் படைக்கப்பட்டன ( முரசு நெடுமாறன், 1997).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1977 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை மலேசியக் கவிதை இலக்கியத்துறைக்கும் வளர்ச்சிக் காலமாகும். இக்காலக்கட்டத்தில் பல பயனுடைய இலக்கிய நூல்கள் படைக்கப்பட்டன. தினமணி (1980), தமிழ் ஓசை (1981) ஆகிய நாளிதழ்களும், வானம்பாடி (1977), மயில் (1986), முதலாய கிழமை இதழ்களும் தோன்றின. இவை கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உதவின. நூல் வெளியீட்டுத் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாகச் சற்றேறக்குறைய 60 நூல்கள் இக்காலகட்டத்தில் இயற்றப்பட்டன. கணைகள் (1977), தீப்பொறி (1978), புயல் (1978), கனல் (1929), ஆகிய இதழ்கள் சமுதாயத்தில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டின. இசைப்பாடல் வரிசையில் தமிழியக்கப் பாடல்கள் (1977), பத்திப்பாடல்கள், தனிப்பாடல்கள், குறுங்காவியங்கள் ஆகிய நூல்களும் வெளிவந்தன. இவ்வேளையில் அருன் சோமசன்மா, கோவதன், முதலாயோர் கவிதை உலகில் காலடி வைத்து வெற்றி நடை போட்டனர். மேலும், மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்க மாதாந்திர நிகழ்ச்சிகளான கவிதைப் பண்ணை, கவிதைக் களம், பொன் பாவலர் மன்ற நிகழ்ச்சிகளில் பலரும் கலந்து கொண்டு கவிதை எழுதத் தொடங்கினர். டத்தோ சிறி சாமிவேலு அவர்களால் தொடங்கப்பட்ட பொன்விழா இலக்கியப் போட்டிகளும் நம் நாட்டில் கவிதை இலக்கியம் வளருவதற்குப் பெரும் பங்கு வகித்தன எனலாம். 1987ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு கவிதைத் துறையின் வளர்ச்சிக்குத் துணை புரிந்தன. இம்மாநாட்டின் வழி சோர்வுற்றிருந்த தமிழர்கள் உணர்ச்சிப் பெற்று எழுந்தனர். இம்மாநாட்டை ஒட்டி தொடர்ந்து நாட்டில் தொடர்ச்சியாக நூல்கள் பல வெளியீடு கண்டன (முரசு நெடுமாறன், 1997).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியக்கவிதை இலக்கிய வளர்ச்சிக்குச் சமூகத்தின் பங்கு அளப்பரியதாகும். மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தங்கப்பதக்க விருதுகள் அன்பளிப்பு, தான்சிறி ஆதி நாகப்பன் இலக்கியப் பரிசு, ஆகிய திட்டங்கள் மலேசியக் கவிதை இலக்கியத் துறையை மேம்படுத்தப் பெரும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பங்கு வகித்தன. இவ்வியக்கங்கள் எழுத்துத் துறைக்கும் எழுத்தாளர்களுக்கும் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. மலேசியப் பாரதி தாசன் இயக்கம் இலக்கிய முயற்சிகளுக்குப் பெரும் ஊக்கம் அளித்து வருகின்றது. கதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்குப் பதக்கங்களை வழங்கி ஊக்குவித்து வருகின்றது. மலேசியாவில் இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலவும் கவிதைத் துறை வேரூன்றுவதற்கு மிக முக்கியப் பங்கு வகித்தன எனலாம் (முரசு நெடுமாறன்,1997).

மலேசியக் கவிதைத் துறையின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் பலரும் பல வழிகளில் உழைத்திருக்கின்றனர். அவ்வகையில் மலையகக் கவிதைத் துறை வளர்ச்சிக்குக கடந்த நூற்றாண்டில் நாராயணசாமி நாயகன், சதாசிவ பண்டிதர் முதலாயோர் இத்துறைக்கு முன்னோடிகளாக விளங்கினர் எனலாம். இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் முகம்மது சுலுத்தான் மரக்காயர், எம்.பி. சிவராமதாசர், சுவாமி அருணகிரிநாதர் முதலானோர் பெரும் பங்கு வகித்தனர். இவர்களோடு மறுமலர்ச்சிக் கவிதைக்கு வித்திட்ட கவிஞர் ந.பழநிவேலு, ச.சா.சின்னப்பன், கவிமணி கண்ணதாசன், அமீது களஞ்சியம், சிங்கை முகிலன், புலவர் அப்துல் மஜீது முதலானோர் மறுமலர்ச்சிக் கவிதைக்கு வித்திட்டவர்களாவர். சமுதாயச் சிந்தனைக் கருத்துகளை முன்வைத்து கவிதைத் துறைக்குக் கவிஞர் கா.பெருமாள், குறிஞ்சிக்குமரன், புலவர் அ.முத்தையன் ஆகியோர் உழைத்தனர். மலேசிய நாட்டில் கவிதைத் துறை இன்றளவும் சிறப்புற்று விளங்கி வர கவிஞர் பட்டாளம் பெருக பல அறிஞர் பெருமக்கள் பாடாற்றி உழைத்துள்ளனர். அவர்களில் முதுபெரும் புலவர் சுவாமி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இராமதாசர், கவிவாணர் ஐ.உலகநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களோடு புதிய கவிஞர்களை பலரும் உருவாக்க புலவர் முத்தையன், கவிமணி கிருஷ்ணதாசன், கா.பெருமாள், குறிஞ்சிக் குமரன் முதலாய பலரும் உழைத்தனர் (முரசு நெடுமாறன், 1997).

மலேசிய நாட்டின் கவிதைத் துறை வளர்ச்சிக்கு நெடுங்காலமாய்ப் பாடுபட்டு வரும் அமைப்புகளில் கவிதைக் களம், கவிதைப் பண்ணை, பொன்பாவலர் மன்றம், வட மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கம் முதலானோரின் முயற்சிகள் பாராட்டுக்குரியன. இவற்றோடு அல்லாமல் ஆங்காங்கே மேற்கொள்ளப்படும் திறனாய்வு முயற்சிகள் கவிதைத் துறை மேலும் வலுப்பெற காரணமாய் அமைந்தன. இவற்றுள், கவிவாணர் உலகநாதன் கருத்தரங்கம் (1970) மலாயாவில் தமிழ்க்கவிதைகள் நூல் பற்றிய கருத்தரங்கு ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவ்வாறாக, மலேசியக் கவிதைத் துறை வளர்ச்சி பெறுவதற்குப் பலரும் தங்கள் பங்கினை ஆற்றியுள்ளனர் (முரசு நெடுமாறன், 2000). மொழியின் மீது இருந்த பற்றின் காரணமாகவும் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களைக் களையும் பொருட்டு சா.சி.குறிஞ்சிக்குமரனார் தமது கவிதைகளை போர் வாளாகத் தொடுக்க முனைந்தார். எனவே, தமது கவிதைகளில் இவ்வாறான கருப்பொருள்களைக் கொண்டு தமது கவிதைகளைப் புனையத் தொடங்கினார். இதன் வழி மக்களிடையே சிந்தனை மாற்றத்தை விதைத்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi